# மழலைக் கீதம்




மூதூர். எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலைக் கீதம்

மூதூர்.எம்.எம்.ஏ.அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

நூலின் பெயர் :- மழலைக்கீதம் (சிறுவர் இலக்கியம்)

விடயம் :- சிறுவர் பாடல்கள்

ஆசிரியர் :- மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்

வெளியீடு :- மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்

அட்டைப்படம் :- B.றினஸ்காந்

உரிமை :- நூலாசிரியருக்கு

முதற்பதிப்பு :- ஏப்ரல் 2015

பிரதிகள் :- 500

ISBN :- 978-955-41569-5-1

விலை :- 250/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

தன் கற்பித்தல் திறனால் சிறுவர்களின்
மனதைக்கவர்ந்து சிறந்ததோர் ஆசிரியராய்த்
திகழ்ந்த எனது சிறிய தந்தையார்
மர்ஹூம் எம்.எம்.முகம்மது கனிபா அவர்கட்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இதுவரை குறள், வெண்பா, மரபுக்கவிதை, புதுக்கவிதை, காவியம் என்றெல்லாம் பெரியோர்களுக்கான இலக்கியம் படைத்துவந்த நான் இன்று "மழலைக்கீதம்" எனும் இந்நூல் மூலம் சிறுவர்களுக்கான இலக்கியப் படைப்புக்களில் காலடி வைத்துள்ளேன். சிறுவர் இலக்கிய மென்பது ஓர் மகத்தான பணியாகும். சிறுவர்கள் களி மண்ணைப் போன்றவர்கள். அவர்களை நாம் விரும்பிய வடிவில் உருவாக்க முடியும் என்பார்கள். அந்த வகையில் சிறுவர்களின் மனதில் நல்ல சிந்தனைகளும் மனுதர்ம உணர்வுகளும், உலகநீதி நெறிகளும் நன்கு பதிய வைக்கப்படல் வேண்டும். இவ்நற்சிந்தனைகள் அவர்கள் மனதில் நன்கு பதிகின்ற போதுதான் அவர்கள் வளர்ந்து பெரியோர்களாய் ஆகிய பின்னாலும் அந்த இளம்பராய உன்னத உணர்வுகளின் அடிப்படையில் மாண்பு நெறி மிக்க மனிதர்களாகச் சமூகத்தில் மிளிர்வார்கள்.

எனவே தான் சிறுவர்களின் மனப்பரப்பில் நல்ல சிந்தனை விதைகளைத் தூவவேண்டிய தார்மீகப் பொறுப்பு அச்சமூகத்தைச் சார்ந்த பெற்றோர்கள் பெரியோர்கள் ஆசிரியர்கள் எழுத்தாளர்கள் அறிஞர்கள் அனைவருக்கும் இருந்து கொண்டிருக்கின்றது. அந்த வகையில் ஓர் எழுத்தாளன் என்ற வகையிலே நான் எழுதிய " மழலைக்கீதம்" எனும் இந்நூல் ஓர் சிறிதளவாவது சிறுவர்களின் மனதில் நற்சிந்தனைகளையும் நல்லுணர்வுகளையும் ஏற்படுத்தும் என்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு. இவ்வேளையிலே தேன்தமிழில் சிறுவர்களுக்கான சிறந்ததாம் பாடல்களைப் படைத்தளித்த மகத்தான கவிஞர்கள் பற்றிய நினைவுகளும் அவர்கள் தம் பாடல்களும் என் உளத்தில் நினைவுகளாக வந்துகொண்டிருக்கின்றன. அந்த வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" பாலைக் கொண்டு தருகின்றேன்
பழமும் தின்னத் தருகின்றேன்
சோலைக் கோடிப் போகவழி
சுற்றிப் பார்ப்பது ஏன்கிளியே"

எனப்பாடிய கவிமணி சி. தேசிக விநாயகம்பிள்ளை அவர்களும்

**" ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை**
**ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!**
**கூடிப்பனங்கட்டி கூழும் குடிக்கலாம்**
**கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!**

எனப்பாடிய தங்கத்தாத்தா என அழைக்கப்படும் நாவாலியூர் க.சோமசுந்தரப் புலவர் அவர்களும்

**" ஓடி விளையாடு பாப்பா – நீ**
**ஓய்ந்திருக்கலாகாது பாப்பா**
**கூடி விளையாடு பாப்பா –ஒரு**
**குழந்தையை வையாதே பாப்பா"**

எனப்பாடிய மகாகவி சுப்ரமணியப்பாரதியாரும்

**"ஆட்டுக் குட்டி எந்தன் குட்டி**
**அருமையான சின்ன் குட்டி**
**ஓட்டம் ஓடி வந்திடுவாய்**
**உனக்கு முத்தம் தந்திடுவேன்"**

எனப்பாடிய கவிஞர் யாழ்ப்பாணன் வே.சிவக்கொழுந்து அவர்களும்

**"காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்**
**கட்டிக் கொஞ்சும் அம்மா**
**பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்**
**பருகத் தந்த அம்மா"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்பாடிய வித்துவான் க. வேந்தனார் அவர்களும் என்றுமே சிறுவர்களால் மறக்க முடியாத அளவுக்கு அவர்களின் மனதில் ஆழ இடம் பிடித்தவர்களாக உள்ளனர். இவர்கள் யாத்த சிறுவர் இலக்கியம் காலத்தால் அழியாமல் என்றும் வாழும்.

சிறுவர்களின் வாழ்வு சிறப்பாக அமைவதற்கு உன்னதமிக்க சிறுவர் இலக்கியங்கள் படைக்கப்படல் வேண்டும் என்ற சிறுவர் இலக்கிய அளவு கோலுக்கமைய அமைக்கப்படுகின்ற சிறுவர் இலக்கியங்கள் சிறுவர்களின் மனங்களில் நீடூழி வாழும். அந்த வகையில் "மழலைக்கீதம்" எனும் இந்நூலில் இடம்பெற்ற எனது சிறுவர் இலக்கிய பாடல்களும் சிறுவர்களின் மனங்களில் ஒரு சிறிதளவாவது இடம் பிடித்து நிற்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

நன்றி

**மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்**

**பெரிய பாலம்**

**மூதூர் - 05**

**தொடர்பு 0776288299**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறையே அருளிடுவாய்

இறைவா! இறைஞ்சி உன்னிடத்தில்
இனிதே நாங்கள் கேட்கின்றோம்
நிறைவாம் கல்விச் செல்வத்தை
நன்கே எமக்கு அருளிடுவாய்

நோயும் நொடியும் அணுகாமல்
நலமாய் புவியில் வாழ்வதற்கும்
ஆய கலையில் உயர்வதற்கும்
ஆண்டவன் நீயே அருள்புரிவாய்

உண்மை நேர்மை நீதிநெறி
உலகில் உயர்வாய்த் திகழ்வதற்கும்
நன்றே இறைவா எங்களுக்கு
நல்லருள் தன்னைச் சொரிந்திடுவாய்

பெற்றோர் பெரியோர் ஆசான்களைப்
பெரிதும் பேணி நாம் நடக்க
வற்றா உந்தன் அருள்தன்னை
வாரி எமக்கு அளித்திடுவாய்

கல்விக் கனியை அருந்திடவே
கல்விக் கூடம் வந்துள்ளோம்
நல்ல அறிவு ஞானத்தை
நாயன் இறையே தந்திடுவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளி ஓடும் பாலர்நாம்
தூய்மை உளமாய் கேட்கின்றோம்
அள்ளி அறிவு ஞானத்தை
அதிக மாக அளித்திடுவாய்

நாட்டில் நாளை நாங்களுமே
நல்ல பதவி வகித்திடவே
ஏட்டுக் கல்வி அணைத்தினிலும்
ஏற்றம் காணச் செய்திடுவாய்

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எந்தன் அருமை அம்மாவே

எந்தன் அருமை அம்மாவே
எனக்கென வாய்ந்த நற்பேறே!
இந்த உலகில் உன் மகிமை
இயம்ப என்னால் முடியாதே

நேரம் தவறா தெந்நாளும்
நன்கே உணவும் அளிக்கின்றாய்
ஆரத் தழுவி முத்தமதும்
அன்பாய் என்மேல் சொரிகின்றாய்

காலை வேளை எனைஎழுப்பிக்
கனிவாய்க் கடன்கள் செய்வித்துப்
பாலும் உணவும் ஊட்டித்தான்
படிக்கப் பள்ளிக் கனுப்புகிறாய்

இரவு நேரம் வீட்டினிலே
இனிதே பாடம் புகட்டுகிறாய்
உரிய வேளை தூங்கிடவும்'
உதவி பலவும் புரிகின்றாய்

எந்தன் உயர்வு ஒன்றினையே
என்றும் எண்ணி வாழ்கின்றாய்
எந்தன் தாயே உனக்கு நிகர்
ஏதும் உலகில் கிடையாதே!

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா

பழமும் பாலும் பல்வகை உணவும்
புசிக்கத் தந்திடும் அம்மா
அழகாம் ஆடை அணியத் தந்து
அழகை ரசிக்கும் அம்மா

சுத்தம் பேணிச் சுகமாய் வாழச்
செப்பி நிற்கும் அம்மா
நித்தம் நானும் நன்கே படிக்க
நன்றே உதவும் அம்மா

கதைகள் கூறிக் கருத்தைத் தூண்டி
களிப்பை நல்கும் அம்மா
எதையும் தாங்கும் ஏற்ற இதயம்
எழிலே என்கும் அம்மா

நானும் படித்து நன்கு உயர
நாளும் தூண்டும் அம்மா
வேணும் என்று வினவும் பொருட்கள்
வாங்கிக் கொடுக்கும் அம்மா

உண்மை நேர்மை உயர்வாம் நெறியை
உணர்த்தி நிற்கும் அம்மா
தின்மை செய்தல் திருடல் யாவும்
தீதாய் தடுக்கும் அம்மா

நானும் நாளை நன்றே வாழ
நவின்று நிற்கும் அம்மா
ஆன உதவி அனைத்தும் எனக்கு
அழகே செய்யும் அம்மா

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயே முத்தம் தா

தாயே எனக்கோர் முத்தம்தா
தழுவி அணைத்தே முத்தம்தா
பேயே போன்ற குணவுலகில்
பாச ஊற்றே முத்தம்தா

தூய அன்பின் உறைவிடமாய்த்
துலங்கும் தாயே முத்தம் தா
நேய மெல்லாம் என்மீது
நல்கும் தாயே முத்தம்தா

எந்தன் உயிரே என்றான
எழிலாம் தாயே முத்தம் தா
உந்தன் உறவு ஒன்றேதான்
உலகின் உயர்வாம் முத்தம்தா

எனதாம் நினைவில் வாழ்கின்ற
எந்தன் தாயே முத்தம்தா
கனவில் கூட எனைத்தானே
காணும் தாயே முத்தம்தா

எனக்கே என்றே உயிர்வாழும்
எந்தன் தாயே முத்தம்தா
கனமும் நினைவில் எனைநீக்காக்
கருணைத் தாயே முத்தம்தா

உயிராய் என்னை மதிக்கின்ற
உன்னத தாயே முத்தம் தா
அயர்வே இன்றி எனைப்பேணும்
அன்பின் தாயே முத்தம்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயின் மகிமை

தாயின் மகிமை செப்புதற்குத்
தகுந்த வார்த்தை உலகில்லை
பேயும் கூடத் தன்தாய்க்குப்
பணிந்து அடங்கும் புரிவோமே

ஈன்ற சேயை தன்னுயிராய்
இனிதே எண்ணிக் காக்கின்ற
மாண்பு மிக்க தாய்யவளே
மண்ணில் எமது பேறாகும்

தாயின் சொல்லை மீறாமல்
தரமாய் அதனை ஏற்றிடுவோம்
ஆயுள் முழுக்கத் தாய்க்குரிய
அத்தனை பணியும் ஆற்றிடுவோம்

தாயின் ஆசை நிறைவேறத்
தரமாய் நாமும் கற்றிடுவோம்
நேயத் துடனே தாயவளை
நிதமும் நன்கு பேணிடுவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகின் சொர்க்கம்

எந்தன் தாய்க்கு நிகராக
எந்த உயிரும் உலகில்லை
அந்தத் தாயின் அரவணைப்பில்
அழகாய் நானும் வளர்கின்றேன்

பத்து மாதம் அவள் வயிற்றில்
பாரம் என்றே நானிருந்தேன்
அத்தனை வலியும் தாங்கியவள்
அழகாய் என்னை ஈன்றாளே

எறும்பும் ஈயும் தீண்டாமல்
எந்த இடரும் அணுகாமல்
சிறப்பாய் என்னை வளர்த்து வரும்
சிறப்பின் சிகரம் தாய்தானே

பள்ளிக் கூடம் எனையனுப்பி
படிக்க நானும் வகைசெய்வாள்
அள்ளி அணைத்து முத்தங்களும்
அன்னை அவளும் தந்திடுவாள்

நலமே நாளும் எனைக்காக்கும்
நாயன் கொடையே தாய்என்பேன்
உலகின் சொர்க்கம் அவள் என்றே
உரைத்து நானும் மகிழ்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் அப்பாவே

அப்பா எந்தன் அப்பாவே!
அன்பு மிக்க அப்பாவே!
தப்பே நானும் செய்கையிலே
தடுத்து நிறுத்தும் அப்பாவே!

பென்சில் பேனா கொப்பியுடன்
புதிய ஆடை யாவுமென
என்றும் வாங்கித் தந்துதவும்
எந்தன் இனிய அப்பாவே!

சிந்தைக் கினிய பாடலுடன்
சிறிய நல்ல கதையெல்லாம்
எந்த நாளும் எனக்கேதான்
எடுத்துக் கூறும் அப்பாவே!

கல்வி கற்று நாளைநான்
கண்ணிய நெறியில் வாழ்வதற்கு
எல்லா வழியும் காட்டுகிற
எந்தன் அன்பின் அப்பாவே

எந்தன் உயர்வை எண்ணித்தான்
என்றும் நடக்கும் அப்பாவே
எந்தன் பேறு நீங்கள்என
எளிலாய் உரைப்பேன் அப்பாவே

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகப் புனிதர்

கல்வி தன்னை எங்களுக்குக்
கனிவாய் நாளும் போதிக்கும்
நல்ல தியா கப்புனிதர்
நமக்கு வாய்த்த ஆசான்கள்

அவர்கள் கூறும் அறிவுரையை
அகத்தில் நாமும் பதித்திடுவோம்
உவப்பே கொண்டு கல்வியிலே
உன்னத நிலையை அடைந்திடுவோம்

எங்கள் ஆசான் அனைவரையும்
என்றும் நாமும் மதித்திடுவோம்
பொங்கும் தியா கச்சுடராய்
போற்றி அவரைப் புகழ்ந்திடுவோம்

உலகின் உன்னத நிலைமைக்கு
உரிய அறிவைத் தருவோர்கள்
கலைகள் புகட்டும் ஆசான்எனக்
களிப்பாய் நாமும் உரைத்திடுவோம்

பெற்ற தமது சேய்கள் என
பிரியத் துடனே எங்களுக்குக்
கற்றே தந்திடும் ஆசான்கள்
கண்ணியத் துயர்ந்தோர் என்றிடுவோம்

என்றும் எங்கள் ஆசான்கள்
ஏற்ற நலமுடன் வாழ்வதற்கு
நன்றே நாமும் இறையோனை
நாளும் உவந்து இறைஞ்சிடுவோம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளும் நாங்கள் வாழ்த்திடுவோம்

அறிவு ஞானம் அளிக்கின்ற
அருமை எங்கள் ஆசான்களை
முறையாய் நாமும் மதித்திடுவோம்
முற்றும் அவர்க்குப் பணிந்திடுவாம்

எங்கள் வாழ்வு எளிலுறவே
என்றும் நன்றே நெறிகாட்டும்
தங்கம் போன்ற ஆசான்களைத்
தலையெனப் போற்றி மகிழ்ந்திடுவோம்

வழங்கும் நல்ல அறிவுரையால்
வாழ்வில் நாங்கள் நலமுறவே
வழியாய் அமையும் குருக்களினை
வாழ்நாள் முழுக்கப் போற்றிடுவோம்

எல்லாம் தங்கள் குழந்தையென
எண்ணிக் கல்வி கற்பிக்கும்
நல்லார் எங்கள் குருக்களினை
நாளும் நாங்கள் வாழ்த்திடுவோம்

மெழுகு திரியாய் எரிந்தெரிந்து
மேன்மை யாகக் கற்பிக்கும்
அழகின் சேவைக் குருக்கள்தம்
அரிய பணியை மெச்சிடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நாடு

இலங்கை எங்கள் தாய்நாடாம்
இன்பம் ஓங்கும் நல்நாடாம்
பலஇன மக்கள் வாழ்நாடாம்
பல்வகை வளங்கள் நிறைநாடாம்

இயற்கை வளங்கள் உளநாடாம்
இன்பம் நிலவும் நன்நாடாம்
உயரிய மலைகள் அமை நாடாம்
உன்னத மிக்க எம்நாடாம்

தென்னை இறப்பர் தேயிலையும்
தெவிட்டாத் தேன்சுவைக் கனிவகையும்
உண்ணப் பல்வகை உணவுகளும்
உயர்வாய் விளையும் நம்நாடாம்

செந்நெல் விளையும் களனிகளும்
சிறந்த இயற்கைத் துறைமுகமும்
வந்தோர் வியக்கும் பலவளமும்
வாய்க்கப் பெற்றது எம் நாடாம்

முல்லை நெய்தல் குறிஞ்சியுடன்
மருதம் போன்ற நானிலமும்
நல்ல முறையில் வாய்த்திட்ட
நமது இலங்கைத் தாய்நாடாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தாய் நாடே !

எந்தன் இலங்கைத் தாய்நாடே!
எழிலின் வடிவத் திருநாடே!
இந்தப் புவியின் சொர்க்கமென
இலங்கும் இன்பம் விளைநாடே

எல்லா வளமும் நிறைந்திட்ட
ஏகன் கொடையின் நன்நாடே
இல்லா நிலைமை இல்லாத
இனிமை நிறைந்த பொன்நாடே

உந்தன் பிரஜை என்கையிலே
உள்ளம் உவகை அடைகிறதே!
நந்த வனத்தின் மலராக
நாளும் எனக்கு மகிமையதே!

நாடே உந்தன் நலனுக்கு
நாடிச் சேவை செய்வதற்கு
ஈடாய் எந்தன் உயிரினையும்
இழக்க இதயம் துணிகிறதே!

எத்தனை இடரே வந்திடினும்
ஏற்றம் எனக்கு நாடென்று
இத்தரை மீதில் வாழ்வேனே!
இதுவே இன்பம் என்பேனே!

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்கள்

உலகின் அறிவு அனைத்தினதும்
உருவாய்த் திகழும் நூல்களினால்
பலனை பெரிதாய் நாம் பெறவே
பல்வகை நூல்கள் வாசிப்போம்

உலகப் பல்கலைக் கழகமென
உன்னதம் பெற்ற நூல்களினை
நலமே நாடி வாசித்து
நாளும் அறிவில் உயர்வோமே!

உன்னத செல்வம் உலகினிலே
உயரிய ஞானம் ஆகையினால்
நன்றே நாமும் நூல்கற்று
நிலைத்த புகழைப் பெறுவோமே!

பள்ளிப் படிப்பு ஒன்றேதான்
போதும் என்று எண்ணாமல்
அள்ளி நூல்கள் அளிக்கின்ற
அத்தனை அறிவும் அடைவோமே!

உலகின் கல்வி யாவினதும்
ஊற்றென நூல்கள் அமைவதனால்
பலநூல் கற்றுப் பண்டிதராய்
பாரில் என்றும் மிளிர்வோமே!

அறிவின் களஞ்சிய மெனநூல்கள்
அதிகம் மேன்மை பெற்றதனால்
முறையாய் நாமும் வாசித்து
மேலாம் அறிவில் திழைப்போமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க !

தாய்திரு நாடு வாழ்க!
தழைத்துச் சிறந்து வாழ்க!
பாயும் நதியும் வாழ்க!
பண்புடை மாந்தர் வாழ்க!

நாட்டுடை மதங்கள் வாழ்க !
நற்குணப் பண்பு வாழ்க!
பாட்டுடைக்கவிஞர் வாழ்க!
பயிரெலாம் செழித்து வாழ்க!

அன்புடன் அமைதி வாழ்க!
அறிவுடைப் பெரியார் வாழ்க!
நன்னெறிக் கொள்கை வாழ்க!
நல்லோர் புகழும் வாழ்க!

நாட்டில் செல்வம் வாழ்க!
நன்றாய் மழையும் வாழ்க!
ஏட்டின் ஞானம் வாழ்க!
என்றும் ஏற்றம் வாழ்க!

கானக வளங்கள் வாழ்க!
களனி விளைந்து வாழ்க!
தானவன் கிருபை வாழ்க!
தமிழும் தழைத்து வாழ்க!

நன்றென நல்லோர் வாழ்க!
நாட்டில் மதமொழி வாழ்க!
என்றும் எங்கள் நாட்டில்
ஏற்றம் வாழ்க! வாழ்க!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுவே! மண்ணின் மாகேடே!

மதுவே! மண்ணின் மாகேடே!
மடிந்து நீயும் போகாயோ!
எதுவித குறையும் இருக்காதே!
எங்கோ நீயும் தொலைந்திடிலோ!

போதையூட்டி நரர்வாழ்வைப்
பொசுங்கிப் போகச் செய்யாதே!
பாதை புரியா நிலைமைக்குப்
பாரில் மாந்தரை ஆக்காதே!

வறுமை வாழ்வை மாந்தர்க்கு
வழங்கி இன்பம் காணாதே!
சிறுமைத் தனத்தின் மனிதரெனச்
சின்னத் தனத்தைக் கொடுக்காதே!

போதை மனிதன் எனும்பெயரைப்
பெற்றிட வழியாய் அமையாதே!
நீதி நேர்மை புரியாமல்
நிலத்தில் நடக்கச் செய்யாதே!

மானம் இல்லா நிலைமைக்கு
மனித வாழ்வை மாற்றாதே!
ஆன துன்பம் அத்தனையும்
அடையச் செய்து மகிழாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டாம்

கலைக்கூடம் செல்லாமல் இருக்க வேண்டாம்
கல்வியிலே நாட்டத்தைக் குறைக்க வேண்டாம்
நிலையில்லாச் செல்வத்தை நம்ப வேண்டாம்
நற்பண்பை இழந்தோரை நாட வேண்டாம்

சத்தியத்தை உரைப்பதற்குத் தயங்க வேண்டாம்
சரித்திரத்தைப் படிப்பதற்குத் தவற வேண்டாம்
இத்தரையில் இழிசெயலில் இறங்க வேண்டாம்
இல்லார்க்கு ஈவதனைத் தடுக்க வேண்டாம்

ஏற்றமிலாக் காரியத்தைச் செய்ய வேண்டாம்
எவ்வுயிர்க்கும் கொடுமைதனை இழைக்க வேண்டாம்
தூற்றுதலை வாழ்வினிலே எடுக்க வேண்டாம்
தூய்மையிலாத் துட்டர்களை நம்ப வேண்டாம்

வாய்மைநிலை துறந்தென்றும் வாழ வேண்டாம்
வறியோரை ஏளனமும் செய்ய வேண்டாம்
ஆய்வின்றிக் காரியத்தில் இறங்க வேண்டாம்
அடுத்தோர்க்குக் கேடுகளை நினைக்க வேண்டாம்

நல்லோரின் உள்ளத்தை உடைக்க வேண்டாம்
நம்பிக்கை மோசடியும் செய்ய வேண்டாம்
வல்லோனை வணங்காமல் இருக்க வேண்டாம்
வருமிடரால் பொறுமைதனை இழக்க வேண்டாம்

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலகரே!

சின்னஞ் சிறிய பாலகரே!
சிறந்த நல்ல தலைவர்களாய்
நன்றே! நாளை திகழ்வதற்கு
நாளும் நன்கு முயல்வீரே!

இன்பம் துன்பம் அனைத்தினையும்
இனிதே தாங்கும் தன்மையினை
என்றும் முயன்று பெறுவீரே!
ஏற்றம் நாளை அடைவீரே!

பிறரின் நலனுக் குதவுகிற
பெரிதாம் தன்மை பெறுவீரே!
சிறந்த நல்ல பண்புநெறி
சிறிய வயதில் தொடர்வீரே!

உள்ளத் துறுதி கொண்டேதான்
உறுத்தும் இடர்கள் சகிப்பீரே!
கள்ளம் இல்லா உள்ளமுடன்
கருத்தில் தூய்மை காப்பீரே!

எண்ணும் எண்ணம் எல்லாமும்
ஏற்றம் என்றே அமைவதற்கு
மண்ணில் நல்ல பக்குவத்தை
முயன்று முறையாய் பெறுவீரே!

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரமே!

மரமே! நாட்டின் நல்வரமே!
மண்ணைக் காக்கும் மகத்துவமே!
பரந்த அளவில் நன்மையினைப்
பாருக் களிக்கும் உன்னதமே!

மழையின் வருகை வழியாக
மானிட வாழ்வின் கருவாக
தழைக்கப் பயிர்க்கு உரமாகத்
தருவே நீதான் உள்ளாயே!

கனியை உலகுக் களிக்கின்றாய்
கனத்த வனப்பும் கொடுக்கின்றாய்
இனிமை நிழலும் தருகின்றாய்
இந்த உலகின் உயிர்ப்பானாய்

மண்ணின் அரிப்பைத் தடுக்கின்றாய்
மலரும் மணமும் நல்கின்றாய்
பொன்னும் மணியும் நாட்டினிலே!
பெரிதும் பெருகும் வழியானாய்

உரமாய் உணவாய் எரிபொருளாய்
உயரிய உதவி புரிகின்றாய்
சிறப்பில் மரமே உன்னுயர்வைச்
சொல்லிட யாரால் முடிந்திடுமோ!

மரமே! உந்தன் மகிமையினை
மண்ணில் நாமும் உணர்ந்தேதான்
பரந்த அளவில் உனை வளர்ப்போம்
பல்வகை பயனும் பெற்றிடுவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோய்

நாட்டின் நாச நோயென்று
நன்கே பரவி இன்றெம்மை
ஆட்டி அழிக்கும் டெங்கதனை
அடியோ டழிக்க முயல்வோமே!

நீரே தேங்கி நிற்கின்ற
நிலைகள் தன்னை மாய்ப்பதனால்
பூரண மாக டெங்கதனை
புவியில் அழிக்க முனைவோமே!

சிரட்டை சிப்பி பேணிகளை
சிறிய பாத்திர உடைசல்களை
பொறுக்கி அகற்றி நுளம்பதனின்
பெருக்கம் தன்னைத் தடுப்போமே!

உயிரை மாய்க்கும் இந்நோயை
உணர்ந்தே தடுக்க முயல்கின்ற
உயரிய அரசின் கொள்கைக்கு
உதவி யாக இருப்போமே!

மனித உயிரை நாட்டினிலே!
மரிக்கச் செய்து மகிழ்கின்ற
பணியைச் செய்யும் டெங்கிற்கு
பரம எதிரி ஆவோமே!

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிச்சைக்காரன்

வறுமை வாட்டும் காரணமாய்
வாழ்வை ஓட்ட வழிதேடி
நிறையக் கவலை கொண்டோனாய்
நம்மை நாடி வந்தள்ளான்

அன்று இவனோ! நல்நிலையில்
அதிகம் உழைத்து வாழ்ந்தானே!
இன்றோ முதுமை நிலையாலே!
இயலா நிலைக்கு ஆனானே!

வயதின் முதுமை கண்டதனால்
வாழ்வின் எல்லை அடைந்துள்ள
இயலா இந்தக் கிழவனுக்கு
இல்லை என்று சொல்லாதீர்

உதவி நாடி வந்துள்ள
உழைப்பின் உருவம் இவனுக்கு
அதிகம் அள்ளிக் கொடுத்திடுவீர்
அகமே உவந்து ஈந்திடுவீர்

வாழ்ந்த இளமைக் காலமெலாம்
வளமாய் உழைத்து வாழ்ந்தயிவன்
வீழும் இந்த முதுமையிலே
வேதனைச் சுமையில் வீழ்ந்தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பத்தமிழே!

இன்பத்த தமிழே இன்னமுதே!
இனிமை நிறைந்த செந்தமிழே!
மண்ணில் உந்தன் மகிமைக்கு
மற்றோர் மொழியும் உண்டாமோ!

உந்தன் ஒவ்வொர் வார்த்தையிலும்
உயரிய நாதம் ஒலிக்கிறதே!
எந்த மொழியும் இவ்வாறு
எங்கும் இருப்பது கிடையாதே!

இனிமை என்பது மொழிகளிலே!
இலங்குவ தெல்லாம் தமிழில்தான்
அனைத்து அகில மொழிகளிலும்
அதிகம் சிறந்தது தமிழேதான்

தாய்மொழி தமிழை நாம்கற்று
தரமாம் தேர்ச்சி பெற்றிடுவோம்
ஆய்ந்து நல்ல கவிகதைகள்
அதிகம் நாமும் யாத்திடுவோம்

❖

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எங்கள் குடும்பம்

இன்பம் மிகைத்த குடும்பம்என
இனிதே எங்கள் குடும்பமது
நன்கே துலங்கும் காரணமாய்
நாளும் மகிழ்வே எந்தனுக்கு

அன்பில் மிகைத்த அம்மாவும்
அருமை யான அப்பாவும்
நன்றாம் தம்பி தங்கைகளும்
நல்ல பேறாம் எந்தனுக்கு

எந்தக் குறையும் இல்லாமல்
எந்தன் தேவை எல்லாமும்
தந்தே மகிழும் தாய்தந்தை
தரணியில் எனக்குப் பெரும்பேறே

வீட்டில் நானும் படிப்பதற்கு
வழியும் பெற்றோர் செய்துள்ளார்
நாட்டில் நாளை நானுமே
நன்கே கற்று உயர்ந்திடுவேன்

கற்றே முடிந்த பின்னாலே
கண்ணிய மாக ஓர்தொழிலை
பற்றி நானும் பிடித்திடுவேன்
பணியால் பிறர்க்கு உதவிடுவேன்

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்கு நடப்போமே!

உயிர்கள் மீது அன்பதனை
உயர்வாய் நாமும் கொள்வோமே!
உயரிய செல்வம் கல்வியினை
உவப்பாய் நாளும் கற்போமே!

தீய செயல்கள் அனைத்தினையும்
தவிர்த்தே நன்கு நடப்போமே!
தூய சிந்தை உள்ளத்தில்
துலங்க என்றும் திகழ்வோமே!

பெற்றோர் பெரியோர் ஆசான்களைப்
பெரிதும் மதித்து நடப்போமே!
உற்றார் உறவைப் பேணுவதில்
உயரிய நிலையில் இருப்போமே!

பெருமை நீக்கிப் புவியினிலே
பணிவைப் பற்றி நடப்போமே!
பிறந்த நாட்டுப் பற்றினிலே!
பெரிதாம் இடத்தில் இருப்போமே!

தீயோர் உறவைக் கனவினிலும்
தீதே என்று கொள்வோமே!
ஆய கலைகள் பயில்வதிலே!
ஆவல் அதிகம் அடைவோமே!

நல்லோர் நட்பைப் பேணுவதில்
நாட்டம் நன்கு கொள்வோமே!
பொல்லார் உறவைத் தவிர்ப்பதிலே
பெரிதும் கவனம் எடுப்போமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது பாட்டி

எனக்கு வாய்த்த பாட்டியவள்
என்னில் இரக்கம் காட்டிடுவாள்
தினங்கள் தோறும் எந்தனுக்குத்
தின்னும் பண்டம் தந்திடுவாள்

நல்ல நல்ல கதைகளினை
நாளும் எனக்குச் சொல்லிடுவாள்
செல்லம் என்றே எனையழைத்து
சிரசை முகர்ந்து மகிழ்ந்திடுவாள்

இரவுப் பொழுதின் வேளையிலே!
இனிதே எனக்குப் படிப்பிப்பாள்
சிறப்பாம் நல்ல அறிவுரைகள்
சொல்லி நன்னெறி காட்டிடுவாள்

சிறிய நோய்கள் என்க்காயின்
சித்த வைத்தியம் செய்திடுவாள்
பரந்த கருத்துச் செறிவான
பாடலும் பாடி மகிழ்விப்பாள்

வீட்டில் எனது தாயார்க்கு
விரும்பி வேலைகள் செய்திடுவாள்
பாட்டி இவளாள் எம்வீடு
பாங்காம் சிறப்பாய் இருக்கிறதே!

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழையே !

மழையே! மழையே! உன்வரவு
மண்ணின் மகிழ்வாய் அமையட்டும்
பிழையாம் நெறியின் காரணமாய்
பிரளய மென்று ஆகாதே!

உலகின் உயிர்ப்பு என்றேநீ
உன்னதம் யாவும் பெற்றாயே!
நலனை நல்கும் நிகழ்வென்று
நானில மீதில் ஆனாயே!

இன்று நீயும் பிரளயமாய்
இன்னல் ஏன்தான் செய்கின்றாய்
நன்றே என்றே! ஆனநீ
நாசம் ஏன்தான் புரிகின்றாய்

பயிரும் உன்னால் அழிகிறதே!
பட்டினி நாட்டை வாட்டுறதே!
உயிரும் பெரிதாய் மாய்கிறதே!
உள்ளம் உருகி அழுகிறதே!

பாதை தோறும் நீர்பரவி
பயணம் யாவும் தடுக்கின்றாய்
நாதி யற்ற நிலைமைக்கு
நாட்டை நாசம் ஆக்குகிறாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலின் செய்கைக் காரர்களை
வறுமை வடிவம் ஆக்குகிறாய்
தயவு சிறிதும் இல்லாமல்
தீண்டி நாட்டை அழிக்கின்றாய்

மழையே! நீயும் இந்நாட்டில்
மகிழ்வின் வடிவம் என்றாகு
தழைத்துப் பயிரும் சிறப்பதற்கு
தக்க காரண மென்றாகு

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழையே உந்தன் வருகையினால்

மழையே உந்தன் வருகையினால்
மண்ணில் வசந்தம் மலர்கிறது
பிழைப்புக் காகப் பயிர்செய்வோர்
பிரியம் அதிகம் அடைந்திடுவர்

பயிரும் உன்னால் செழிக்கிறது
பசுமை எங்கும் நிறைகிறது
உயிர்கள் நல்ல உவகையினை
உந்தன் வரவால் அடைகிறது

களனி நன்கு விளைகிறது
கஷ்டம் யாவும் தொலைகிறது
குளங்கள் நீரால் நிறைகிறது
குளிர்மை நாட்டில் நிறைகிறது

வரட்சி நீங்கிப் போவதனால்
வளமே எங்கும் சிறக்கிறது
குறைகள் இல்லா நிலைமைக்கு
குவலயம் உயர்வு காண்கிறது

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரங்குத் தொல்லை

குரங்கின் தொல்லை நாட்டினிலே
கூடிக் கொண்டு வருகிறதே!
பெரிதும் நஷ்டம் விளைகிறதே!
போக்கிட வழியும் கிடையாதே!

வீட்டின் கூரைத் தகடுகளை
வீணாய் உடைத்து நொறுக்கிறதே!
வீட்டின் பெண்கள் குழந்தைகளை
விரட்டி தொல்லை தருகிறதே!

பயிர்கள் எதையும் வீட்டினிலே!
பாங்காய் வளர்க்க முடியாதே!
துயரம் நல்க அப்பயிரைத்
துவம்சம் குரங்கும் செய்கிறதே!

மரக்கறி கீரை கனிவகைகள்
மற்றுள பயிர்கள் அனைத்தையுமே!
விரைந்து உண்டு மாய்கின்ற
வினையைக் குரங்கும் செய்கிறதே!

வறுமை நிலையில் விவசாயி
வாழக் குரங்கே! காரணமாம்
விரைந்து அதனை விரட்டுதற்கு
வழியும் இங்கே கிடையாதே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் உயர்வின் நோக்கினிலே!
நன்றே அரசும் குரங்கதனை
ஓட்டி விரட்டும் நல்முடிவை
ஒழுங்காய் விரைந்து எடுத்திடுமோ!

குரங்கின் தொல்லை நாட்டினிலே
கூடிய கதியில் நீங்காதோ!
வரவை நோக்கிப் பயிரிடுவோர்
வாழ்வில் வசந்தம் ஓங்காதோ!

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்தோர் உலகில் ஆசான்கள்

அறிவின் சுடராய் அற்புதமாய்
அறியா இருளின் அழிவிடமாய்
சிறப்பின் தொழிலின் திருவிடமாய்
சிறந்தோர் உலகின் ஆசான்கள்

அறிவின் தீபம் என்றேதான்
அவனி மீதில் மிளிர்கின்ற
பெருமைக் குரிய குருக்கள்தான்
புவியில் பெரிய புனிதர்கள்

கல்விக் கடலில் மாணவர்க்குக்
கலங்கரை விளக்காய் ஆனோர்கள்
நல்ல குருவெனக் குவலயத்தில்
நற்பணி நாளும் புரிவோர்கள்

வறுமை வாழ்வின் பிடியினிலும்
வளமே இல்லா நிலையினிலும்
பெருமை என்றே போதித்துப்
பெரிதும் மகிழ்வு காண்போர்கள்

குருவே உங்கள் மகிமைக்குக்
குவலய மீதில் ஈடில்லை
சிறப்பின் சிறப்பும் நீங்கள்தான்
சிந்தை இதைத்தான் சொல்கிறதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதும் அறிய மாணவரை
ஏற்ற அறிவின் தாரகைாய்
பூதள மீதில் உருவாக்கிப்
பூரிப் படையும் புனிதர்கள்

ஈன்ற சேயாய் மாணவரை
இதயத் தாலே உவந்தேற்று
சான்றோன் ஆக்கப் பாடுபடும்
சரித்திர புருஷர் ஆசான்கள்

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுவே நீயும் மடிந்துவிடு

மனிதம் மண்ணில் மகிமையுற
மதுவே நீயும் மடிந்துவிடு
புனிதர் என்றே புவிவாழ்வோர்
பெயரைப் பெறவும் வழியை விடு

உழைக்கும் செல்வம் அனைத்தையுமே!
உதவா உன்னை குடிப்பதற்காய்
பிழையின் பாதை செலவிடுவோர்
புரிந்தே திருந்த நெறியைவிடு

வறுமை நிலையில் குடும்பமெலாம்
வாழும் நிலையை ஆக்குகிற
சிறுமைத் தனத்தைச் செய்திடுவோர்
சீர்மை பெறவே உதவிவிடு

உடலின் நலனைக் கெடுத்திங்கு
உயிரும் நீண்டு வாழ்வதனைத்
தடுக்கும் மதுவே உன்தொடர்பைத்
தரணி தன்னில் விட்டுவிடு

மனிதர் வாழ்வு மண்ணினிலே!
மகிமை இழந்து போவதற்கு
துணையாய் நீயும் ஆகாமல்
தூர விலகிச் சென்றுவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் மகிழ்வு மேலோங்க
மதுவே நீயும் மானிடரில்
என்றும் தொடர்பு இல்லாத
எளிலாம் நிலையை ஆக்கிவிடு

மதுவே! நீயும் இல்லையெனில்
மகிழ்வே! நாட்டை அணிசெய்யும்
இதுவே! எங்கள் இறைஞ்சுதலால்
இன்றே! நீயும் தொலைந்துவிடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பாவே

சின்னஞ் சிறிய பாப்பாவே!
சிரித்து மகிழும் பாப்பாவே!
உன்னைக் காணும் பொழுதினிலே!
உள்ளம் எனக்கு மகிழ்கிறதே!

தத்தித் தவழும் பாப்பாவே!
தங்கம் நீதான் பாப்பாவே!
இத்தரை மீதில் எந்தனுக்கு
இன்பமும் நீதான் பாப்பாவே!

உந்தன் மழலை பேச்சினிலே!
உலாவும் இன்பம் எத்தனையோ!
அந்த ரத்துத் தன்மதியும்
அழகில் உனக்கு நிகராகா!

உலகின் உயிர்ப்பே! என்றான
உன்னதம் உலகில் நீதானே!
நலமே பாப்பா நீவளர்ந்து
நளைய உலகில் உயர்ந்திடுவாய்!

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்கள் வாசிப்போம்

நூல்கள் என்பது மாந்தர்க்கு
நற்பயன் நாளும் நல்கிடுமே!
ஆல்போல் அறிவின் விருத்திற்கு
ஆன வழியாய் அமைந்திடுமே!

நிறைய நூல்கள் வாசிப்பின்
நாமும் அறிஞர் ஆகிடலாம்
குறையே இல்லா வாழ்வதனைக்
குவலய மீதில் பெற்றிடலாம்

நூல்கள் திரட்டி வீட்டினிலே
நூலகம் ஒன்றை நிறுவிடுவோம்
கால்கோல் என்றே அன்னதுவும்
கனத்த அறிவுக் குதவிடுமே

உலகில் பெரிய செல்வமென
உணர்வோம் நாமும் நூல்களினை
நலமே நாளும் கற்றதனை
நன்றாம் அறிஞர் நாமாவோம்

அறியா மூடர் எனும்சொல்லை
அகற்றும் வழியாய் நூலலதுவும்
முறையாய்த் துலங்கும் காரணமாய்
மனமே உவந்து நூல்படிப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் வீடு

எங்கள் வீடு அழகியதே!
ஏற்ற வசதியும் கொண்டதுவே!
எங்கும் மரங்கள் நிறைந்தே தான்
எழிலை வீட்டுக் களிக்கிறதே

மாமரம் வீட்டில் காய்ப்பதனால்
மகிழ்வாய் பறித்து உண்போமே!
பூமரம் பூத்துக் குலுங்குவதால்
பெரிதும் உவந்து இரசிப்போமே!

வளவில் வாழைக் கனியதுவும்
வடிவாய்க் கனிந்து தெரிந்திடுமே!
உளமே மகிழ்ந்து நாங்களுமே!
உண்டு இன்பம் காண்போமே!

குயிலும் வீட்டின் மரங்களிலே
கூவி இன்னிசை பாடிடுமே!
உயரிய தெங்கில் கிளிகளுமே!
உரமாய்க் கீச்சல் செய்திடுமே!

பலா மரத்தின் கனிகளினை
பதுங்கி அணிலும் உண்ணுகையில்
உலா வும்மணம் காரணமாய்
உடனே அதனைப் பறித்துன்போம்

வளரும் சேவல் வீட்டினிலே
வசந்தம் ஓங்கக் கூவிடுமே!
உளமும் மகிழ்வில் திழைத்தேதான்
உயரிய இன்பம் நாமடைவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசான் தன்னைப் புகழ்வோமே

கல்விக் கனியை எமக்களித்துக்
களிப்பே கொள்ளும் ஆசான்கள்
சொல்ல முடியாச் சிறப்பதனின்
சொந்தக் காரர் புரிவோமே!

உலகின் தொழில்கள் அனைத்திலுமே
உயரிய தாகும் கற்பித்தல்
நலமே இப்பணி புரிகின்ற
நம்ஆ சான்களைப் புகழ்வோமே!

பெற்ற சேயாய் மாணவரை
பெரிதாய்ப் பேணிக் கல்வியினை
பற்றாய் எமக்குப் புகட்டுகிற
புனிதர் தானே! ஆசான்கள்

பற்பல தியாகம் செய்தேதான்
படிப்பில் நாமும் உயர்ச்சியுற
நன்றே உதவும் ஆசான்களை
நாமும் போற்றி மகிழ்வோமே!

எங்கள் ஆசான் எல்லோரும்
என்றும் எளிலுற மாணவர்நாம்
பொங்கும் பெரிதாம் வாஞ்சையுடன்
பெரியோன் இறையை வேண்டிடுவோம்

இறைவா! எங்கள் ஆசான்கள்
இவ்வுல கினிதே வாழ்வதற்கு
நிறைவாய் உந்தன் அருள்தன்னை
நீயும் நன்கு அருளிடுவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மல்லிகைப் பூ

மல்லிகைப் பூவின் மணமதிலே
மனமும் மகிழ்வில் திழைக்கிறதே!
மல்லிகை மலரே மலர்களிலே
மகிமை அதிகம் கொண்டதுவாம்

மாலைகள் தொடுக்க மல்லிகையின்
மலரை மக்கள் நாடிடுவர்
சாலைகள் தோறும் மல்லிகையின்
சிறப்பாம் மாலைக் கடைகளுண்டு

மங்கையர் தலையில் சூடுதற்கு
மல்லிகை மலரை விரும்பிடுவர்
இங்ஙனம் மல்லிகை மலருக்கு
இதமாம் சிறப்புப் பலவுண்டு

வாசம் நுகரும் நோக்கினிலே
வயதார் கூட இம்மலரை
ஆசை கொண்டு சட்டைப்பையுள்
அதிகம் கொய்தே வைத்திடுவர்

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செந்தமிழ் தன்னைக் கற்றிடுவோம்

செந்தமிழ் தன்னைக் கற்றிடுவோம்
சிறப்பாய் அதனில் தேர்ந்திடுவோம்
அந்தத் தமிழே எங்களது
அருமைத் தாய்மொழி என்றிடுவோம்

நல்ல நல்ல கவிதைகளை
நாமும் தமிழில் யாத்திடுவோம்
நல்ல தமிழின் நூல்களையும்
நன்கே தேர்ந்து கற்றிடுவோம்

நீதி நெறியின் பாடல்களும்
நேரிய பண்புக் கதைகளுமே
போதிய அளவு தமிழினிலே
பொதிந்தே உளதால் அதைக் கற்போம்

நல்லோர் பெரியோர் வரலாறும்
நம்மொழி தமிழில் உள்ளதனால்
சொல்லி அந்நூல் வாங்கியே
சிறப்பாய் அதனைக் கற்றிடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடியற் பொழுதின் வேளையிலே

விடியற் பொழுதின் வேளையிலே
வியக்கும் வண்ணம் சேவல்களும்
வடிவாய்க் கூவும் ஓசையிலே
விழித்தே நாமும் எழுந்திடுவோம்

காலைக் கடனை முடித்தபினே
கல்விக் கூடம் செல்வதற்காய்
பாலர் நாமும் ஆயத்தம்
பாங்காய் நாளும் செய்திடுவோம்

காலை உணவை உண்டபினே
கல்விக் கூடம் சென்றிடுவோம்
ஆலை மரம்போல் கல்வியிலே!
அதிகம் உயரக் கற்றிடுவோம்!

கல்விக் கனியை எங்களுக்கு
கனிவாய் அருந்தத் தருகின்ற
நல்லார் எங்கள் ஆசான்களை
நன்றே நாமும் மதித்திடுவோம்

நாளை நாட்டில் நாங்களுமே!
நல்லோர் தொழிலை அடைவதற்கு
வேளை தவறா தெந்நாளும்
விரும்பிக் கல்வி கற்றிடுவோம்!

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரும்பிப் பாடம் படியுங்கள்

கல்வி தன்னில் கரிசனையைக்
கடுமை யாகக் காட்டுங்கள்
நல்ல முறையில் கற்பதற்கு
நாளும் உறுதி கொள்ளுங்கள்

வீட்டில் இருக்கும் வேளையிலும்
விரும்பிப் பாடம் படியுங்கள்
நாட்டின் நடப்பு விடயமதும்
நன்கே அறிந்து கொள்ளுங்கள்

நல்ல நீதிக் கதைகளையும்
நாட்ட முடனே படியுங்கள்
பொல்லார் தொடர்பை நீக்கியே
புனிதன் என்று வாழுங்கள்

பெற்றோர் தம்மைப் பேணுங்கள்
பெரிதாய் அவர்சொல் மதியுங்கள்
கற்றல் தம்மைக் கடனாகக்
கருதி என்றும் நடவுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ண மயிலின் அழகைப்பார்

வண்ண மயிலின் அழகைப்பார்
வியப்பாய் எமக்கு இருக்கிறதே!
சின்னச் சின்னப் புள்ளிகளும்
சிறப்பாய்த் தோகையில் தெரிகிறதே!

அழகாம் தோகை விரிக்கையிலே!
அதனின் அழகோ! பேரழகு
அழகே கொண்ட பறவைகளில்
அதிகம் உயர்வும் மயிலேதான்

முகிலை அதுவும் கண்டவுடன்
மகிழ்ந்து அழகாய் ஆடிடுமே!
அகமும் அதனைப் பார்ப்போர்க்கு
அதிகம் உவப்பாய் ஆகிடுமே!

பட்ட மரத்தில் இரவினிலே!
பாங்காய் வாழ்வைக் கழிக்கிறதே!
வட்ட வடிவத் தோகையது
வடிவை அதற்கு வழங்கிறதே!

வீட்டில் கூட மயிலதனை
விரும்பிச் சிலரும் வளர்த்திடுவர்
நாட்டில் அதனைக் காத்திடவே!
நமது அரசும் முயல்கிறது

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிதாய் நீயும் உண்பாயே!

பச்சைக் கிளியே உந்தனுக்குப்
பழமும் பல்வகை உணவுகளும்
இச்சை உடனே நான்தருவேன்
இனிதே நீயும் உண்பாயே!

பாலர் எம்போல் பேசுதற்குப்
பாங்காய் உன்னைப் பழக்கிடுவேன்
பாலும் பருகத் தந்திடுவேன்
பாசத் துடனே பழகிடுவேன்

நன்றாம் வசதி கொண்டமைந்த
நல்லோர் கூடும் தந்திடுவேன்
என்றும் நீயும் இன்பமுடன்
ஏற்றம் என்றே வாழ்வாயே!

என்னை விட்டே நீங்காமல்
ஏற்ற வேறிடம் செல்லாமல்
என்றும் இந்தக் கூட்டினிலே
எளிலாய் நீயும் வாழ்வாயே!

ஏதும் அறியாப் பாலகனே!
ஏதோ நீயும் பகர்ந்திட்டாய்
போதும் போதும் சிறைவாழ்வு
பறந்தே போக விட்டுவிடு

சிறையில் வாழ்வதும் வாழ்வாமோ!
சிறப்பின் உணவும் ஏனாமோ!
நிறைவாம் வாழ்வு எந்தனுக்கு
நிலத்தில் கானக வாழ்வேதான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பி எந்தன் தம்பியே !

தம்பி எந்தன் தம்பியோ
தங்கம் போன்ற தம்பியே!
தும்பி போன்று துடிப்பாகத்
துள்ளி அவனும் திரிவானே

தத்தித் தத்தி நடப்பானே!
தடுக்குப் பட்டும் வீழ்வானே!
கத்திக் கத்தித் திரிவானே!
கதியாய்ச் சிரித்தும் மகிழ்வானே!

பசியும் வந்து விட்டாலவன்
பதைத்துத் துடித்து அழுவானே!
புசிக்க உணவு கொடுத்தாலோ!
பூரிப் படைந்து நிற்பானே!

அம்மா மட்டும் அங்கவனின்
அருகில் வந்து விட்டாலோ!
சும்மா அவனும் சிணுங்கித்தான்
சேட்டை பலவும் செய்வானே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடல்

கடலின் பெருத்த அலைதனிலே!
கலங்கள் செல்லும் விதத்தைப்பார்!
திடமே கொண்ட மீனவர்கள்
தினமும் பிடிக்கும் மீனைப்பார்!

அலைகள் தழுவும் கரையினிலே!
அழகாய்ப் படர்ந்த அடம்பன் பார்!
வலையில் பட்ட மீன்களது
வகைகள் எத்தனை என்றேபார்!

காகம் கரையில் மீன்களினை
காலில் வைத்தே கொத்தல்பார்!
ஆகப் பெரிய கப்பல்களும்
அங்கே போகும் அழகைப்பார்!

பறந்து பறந்து பருந்துகளும்
பற்பல மீனை அள்ளல்பார்
பெருத்தே வளர்ந்த புங்கைமரம்
பரப்பும் நிழலின் அருமைபார்!

கடலின் கரையின் ஓரமெலாம்
காட்சி நல்கும் தெங்கைப்பார்
கடலின் காற்றை நுகர்ந்திடவே!
காத்துக் கிடக்கும் சனத்தைப்பார்!

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னை மரமே உன்னாலே

தென்னை மரமே உன்னாலே!
தொகையாம் பலனைப் புவிமக்கள்
நன்றே நாளும் அடைகின்றார்
நல்ல மகிழ்வில் திழைக்கின்றார்

எமது தாகம் தீர்ப்பதற்கு
என்றும் இளநீர் தருகின்றாய்!
நமது கறிக்குச் சுவையூட்ட
நாளும் தேங்காய் தருகின்றாய்!

வீடு வேயக் கிடுகானாய்!
வெயிலில் நல்ல நிழலானாய்!
நாடு செழிக்க நல்லுதவி
நன்றாய் நீயும் புரிகின்றாய்

அடுப்பு எரிக்கும் விறகாகி
அதிகம் பலனாய் ஆகின்றாய்!
நடுவர் நன்றே உனைமெச்ச
நன்றாய் நீயும் திகழ்கின்றாய்

தெங்கே உலகில் உன்னைப்போல்
தந்திடும் பலன்கள் மரங்களிலே
எங்கும் எதுவும் கிடையாதே!
ஏற்றம் மரத்தில் நீதானே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்ணிலவே!

நீல வானம் மீதினிலே
நீந்தி வந்திடும் வெண்ணிலவே!
பாலர் நாங்கள் மகிழ்கின்ற
பெருத்த அழகின் வெண்ணிலவே!

கண்ணைக் கவரும் காட்சிதரும்
கனத்த அழகின் வெண்ணிலவே!
மண்ணில் ஒளியை வீசிவரும்
மகிமை கொண்ட வெண்ணிலவே!

இரவின் இருளை விரட்டியே
இன்பம் நல்கும் வெண்ணிலவே!
பெருமை யாக உன்னழகைப்
போற்றி நாமும் மனிழ்கின்றோம்

கவிஞர் பாடும் கவிதைகளின்
கனத்த கருவாம் வெண்ணிலவே!
புவியில் உந்தன் அழகிற்கு
பகரம் வேறொன் றிலைதானே!

உலகில் அழகில் உயரியதாய்
உன்னதம் கொண்ட வெண்ணிலவே!
நலமே உந்தன் புகழ்புவியில்
நிலைத்தே வாழும் உணர்வோமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயி

பசுமை மிக்க தன்வயலை
பார்த்து மகிழும் விவசாயி
பசியைக் கூட மறந்தேதான்
பெரிதாய் வயலில் உழைக்கின்றான்

வாய்க்கால் வழியே வருநீரை
வயலில் பாய்ச்சி மகிழ்கின்றான்
காய்த்து முற்றிய நெற்கதிரும்
காற்றில் அசைவதை ரசிக்கின்றான்

வரம்பின் வழியே நடக்கின்றான்
வயலை வலமே வருகின்றான்
உரமும் மருந்தும் பயிருக்கு
உரிய வேளை இடுகின்றான்

காலை மாலை என்றின்றிக்
கடுமை யாக உழைக்கின்றான்
ஆலை மரமாய்த் தன்வாழ்வு
அதிகம் உயர உழைக்கின்றான்

வியர்வைத் துளிகள் நிலத்தினிலே
வீழ்ந்து படிய உழைக்கின்றான்
உயரும் தனது வாழ்வென்று
உணர்ந்து அவனும் உழைக்கின்றான்

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகம்

அறிவின் சுரங்கம் நூலகமே!
அதுதான் அறிவின் ஊற்றிடமே!
முறையாய் நாளும் நூல்கற்று
மேதை என்றே நாமாவோம்

உலகின் செல்வம் அனைத்தினிலும்
உயரிய செல்வம் நூல்கள்தான்
நலமே நாடி நூல்களினை
நன்றாய் நாமும் கற்போமே!

உலகின் அறிவு எல்லாமும்
உரிய முறையில் இங்குண்டு
பலவும் கற்றுப் பண்டிதராய்ப்
பாரில் நாமும் ஆகிடுவோம்

வீட்டிலும் நூலகம் ஒன்றதனை
விரும்பி நாமும் அமைத்திடுவோம்
ஏட்டு ஞானம் எல்லாமும்
எளிதாய் அதனால் அடைந்திடுவோம்

நல்ல நல்ல நூல்களினை
நாமும் தேர்ந்து படித்திடுவோம்
எல்லா அறிவின் ஞானங்களும்
எம்மை அணியே செய்யட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் தோப்பு

பயிர்கள் நிறைந்து காட்சிதரும்
பசுமை நிறைந்த என்தோப்பில்
உயிரே நானும் வைத்துள்ளேன்
உள்ளம் மகிழ்வு அடைகின்றேன்

இனிமை கொண்ட பழவகையும்
இனத்தில் சிறந்த மாங்கனியும்
கனிந்து காட்சி தருகிறதே
கரும்பும் செழித்து வளர்கிறதே!

குருவிக் கூடும் தெரிகிறதே
குயிலும் கூவி மகிழ்கிறதே
வறுமை இல்லா வாழ்வுக்கு
வழியாய்த் தோப்பும் அமைகிறதே!

கோழியும் நன்கு வளர்வதனால்
கனமாய் முட்டை கிடைக்கிறதே!
வாழை மரமும் குலையீன்று
வனப்பில் மேலும் சிறக்கிறதே!

தேக்கு சமுளை தெங்கெல்லாம்
தொகையாய் ஓங்கி வளர்கிறதே
பாக்கு மரமும் காய்க்கிறதே!
பார்க்க இன்பம் நிறைகிறதே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றுமை ஓங்க வகைசெய்வோம்

நாட்டில் மகிழ்ச்சி நிலவுதற்கு
நல்ல அமைதி தேவையதால்
ஓட்டி நாமும் வேற்றுமையை
ஒற்றுமை ஓங்க வகைசெய்வோம்

எந்தக் குழப்பம் ஆனாலும்
எடுத்துப் பெரிதாய் நோக்காமல்
அந்தப் பொழுதே அதை மறந்து
அமைதி நிலவ வழிவகுப்போம்

விட்டுக் கொடுக்கும் தன்மையினால்
விரைந்து வளரும் பகைமையினை
விட்டே நாமும் ஒதுங்கிடுவோம்
வளமாய் உலகில் வாழ்ந்திடுவோம்

அன்பும் அறமும் நாட்டினிலே
ஆட்சி செய்ய வழிவகுத்து
இன்பம் இனிதே நிலவுதற்கு
இயன்ற மட்டும் உழைத்திடுவோம

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியனே!

கிழக்கின் திசையில் உதிக்கின்ற
கீர்த்தி மிக்க சூரியனே!
வழக்க மாக உன்வருகை
வையக விடியல் ஆகிறதே!

மேற்குத் திசையில் மறைகின்ற
மேன்மை கொண்ட சூரியனே!
ஈற்றில் உந்தன் மறைவேதான்
இரவின் இருளாய்ப் போகிறதே

உலகில் உயிர்கள் வாழ்வதற்கு
உதவி நல்கும் சூரியனே!
பலனில் உந்தன் உயர்வுக்குப்
பகர வார்த்தை உண்டாமோ!

உலகில் பயிர்கள் வளர்வதற்கும்
உயரிய காரணம் நீதானே!
நலமாய் உந்தன் பலன்தன்னை
நன்கே நாமும் அறிவோமே!

அந்தி மாலைப் பொழுதினிலே!
அகத்தில் மகிழ்வு தருகின்ற
உந்தன் காட்சிக் கோலத்தை
உவந்து நோக்கி மகிழ்வோமே!

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழை மரமே!

வாழை மரமே உலகில் நீ
வகைகள் பலவாய் உள்ளாயே
ஏழை மக்கள் அப்பிள்என
எழிலாம் பேரும் பெற்றாயே!

வாழை அடியின் வாழையென
வாழ்ந்து நீயும் வருகின்றாய்
வாழைப் பழத்தின் இனிமைக்கு
வாய்த்த பழமும் வேறில்லை

அழகாய் வளர்ந்து காட்சிதரும்
அழகுப் பயிரும் நீயேதான்
வழமை யாக வருமானம்
வழங்கும் பயிரும் நீயே தான்

இனிமை மிக்க பழங்களிலே
இனிமை அதிகம் உனக்கேதான்
எனவே நாமும் உனைஎன்றும்
எங்கள் வீட்டில் வளர்த்திடுவோம்

பறங்கி, கதலி, இதறையென
பல்வகை இனமாய் நீயுள்ளாய்
சிறப்பாய் உன்னைப் பயிரிட்டு
சீவிய வருவாய் பெறுவோமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை தன்னைப் பற்றிடுவோம்

ஒற்றுமை தன்னைப் பற்றிடுவோம்
ஒழுக்கம் பேணி நடந்திடுவோம்
பற்றும் நாட்டில் கொண்டிடுவோம்
பாரே! போற்ற வாழ்ந்திடுவோம்

துன்பம் துயரம் தாங்கிடுவோம்
துடிப்பாய் என்றும் இருந்திடுவோம்
இன்னல் இழைப்பது தவிர்த்திடுவோம்
இனிதாய் நட்பைக் காத்திடுவோம்

பெரியோர் தம்மை மதித்திடுவோம்
பெருமைத் தனத்தை போக்கிடுவோம்
சிறியோர் மீது அன்பதனைச்
சிறப்பாய் என்றும் காட்டிடுவோம்

பெற்றோர் தம்மைப் பேணிடுவோம்
பெரிதாய் உறவை மதித்திடுவோம்
தொற்றும் நோய்கள் தொடராமல்
தினமும் சுத்தம் காத்திடுவோம்

உயிர்கள் மீது அன்பதனை
உயர்வாய் என்றும் காட்டிடுவோம்
அயர்வே இன்றிக் கல்வியிலே
அதிக நாட்டம் காட்டிடுவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாம்பழமே

மஞ்சள் நிறத்து மாம்பழமே!
மனதைக் கவரும் மாம்பழமே!
கெஞ்சிச் சிறுவர் கேட்கின்ற
கடுமை உருசியின் மாம்பழமே!

மழலையர் மனதில் நாளும்நல்
மாண்பைப் பெற்ற மாம்பழமே!
அழகு அணிலும் உவக்கின்ற
அருமை யான மாம்பழமே!

தின்னத் தின்னத் தெவிட்டாத
தேனின் இனிமை மாம்பழமே!
வண்ணக் கிளிகள் நாடிவரும்
வடிவில் மிகைத்த மாம்பழமே!

பெரியோர் கூட விரும்பியுண்ணும்
பெருமை கொண்ட மாம்பழமே!
அருமை யான சுவைகொண்ட
அதிக மகிமை மாம்பழமே!

பலவாம் சாதி என்றேதான்
பாங்காய்த் திகழும் மாம்பழமே!
நலமே சிறுவர் நாளும்உனை
நாடி உண்டு மகிழ்வோமே!

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டை பெற்று உண்டிடுவோம்

கோழி உலகில் மாந்தர்க்கு
கொடுக்கும் பலனோ உயரியது
வாழி! வாழி! என்றேதான்
வரமாய் முட்டை வழங்கிறது

தானும் இறைச்சே என்றாகி
தரணியில் மாந்தர்க் களித்தேதான்
ஆன பெரிய உதவியெலாம்
ஆற்றி அதுவும் திகழ்கிறது

வறுமைப் பட்டோர் தம்வாழ்வு
வளமே காண அதைவளர்த்து
சிறப்பாம் செல்வம் சேர்க்கின்றார்
சிறந்த பலனைப் பெறுகின்றார்

சிறுவர் நாமும் கோழிகளின்
சிறப்பைச் செப்பி மகிழ்வோமே!
முறையாய் அதனை வளர்த்தேதான்
முட்டை பெரிதும் பெறுவோமே!

கோழிச் சேவல் அதிகாலை
கூவி எம்மை எழுப்பிடுமே!
வாழி என்றே அதைவாழ்த்தி
வளர்த்துப் பலனும் பெறுவோமே!

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலவாம் பயன்கள் பசுவாலே

உலகில் உள்ள மிருகங்களில்
உன்னதம் மிக்கது பசுவேதான்
பலவாம் பயன்கள் அதனாலே
பாலர் நாமும் புரிவோமே!

பச்சை புல்லைப் புசிக்கின்ற
பசுவின் சாந்த குணந்தன்னால்
இச்சை கொண்டே மானிடரும்
இனிதே பசுவை வளர்த்திடுவர்.

பாலர் நாங்கள் பருகுதற்கு
பாலை நன்கு தருவதுடன்
காலம் தோறும் கன்றீன்று
களிப்பை எமக்குத் தந்திடுமே!

இதனால் வீட்டில் பசுவொன்றை
இனிதே நாமும் வளர்த்திடுவோம்
அதனால் அதிக செல்வத்தை
அடைந்தே நாளும் மகிழ்ந்திடுவோம்

❖

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யானை

பென்னம் பெரிய மிருகமது
பெருமைத் தந்தம் பெற்றிருக்கும்
சின்னஞ் சிறிய கண்ணிருக்கும்
சுளகு போன்ற காதிருக்கும்

கரும்பை விரும்பி உண்டிடுமே!
கருமை நிறமாய்த் தோன்றிடுமே!
இரும்பு போன்று உறுதியுடன்
இருக்கும் உடம்பும் இதற்கேதான்

பழக்கும் போது மனிதனுக்குப்
பணிந்து அடங்கிப் போய்விடுமே!
ஒழுங்காய்ச் சுமையைத் தூக்குதற்கு
உதவும் விலங்கும் யானைதான்

தும்பிக் கையதன் துணையாலே!
துடிப்பாய் என்றும் செயலாற்றும்
தும்பி என்றும் யானைக்குத்
துலங்கும் பெயரும் உண்டேதான்

நெல்லின் வயலை யானைகளும்
நாசம் செய்து அழித்திடுமே!
தொல்லை தாங்கா விவசாயி
தொடராய் வறுமை அடைகின்றான்

வேலி போட்டே யானைகளை
விரட்ட அரசு முயன்றாலும்
பலனே இல்லை இத்திட்டம்
பாவம் அந்தோ... விவசாயி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாய்

நன்றி மிக்க மிருகத்தில்
நாய்க்கு நிகராய் வேறில்லை
நன்றாய்க் காவல் செய்திடுமே!
நண்பன் போல பழகிடுமே!

வீட்டைச் சுற்றி வந்திடுமே
விடிய விடியக் குரைத்திடுமே!
வீட்டில் திருடர் நுழையாமல்
விழிப்பாய் என்றும் இருந்திடுமே!

துள்ளித் துள்ளிப் பாய்ந்திடுமே!
துடிப்பாய் என்றும் துலங்கிடுமே!
அள்ளி உணவை அளித்திடிலோ!
அடங்கி அமைதி ஆகிடுமே!

நல்ல காவல் என்றேதான்
நாயை நாமும் வளர்த்திடுவோம்
நல்ல முறையில் உணவூட்டி
நாளும் நன்கு பேணிடுவோம்

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சைக் கிளியே !

பச்சைக் கிளியே உன்னழகு
பார்க்கப் பரவசம் ஆகிறதே
மெச்சும் சிவப்பு நிறச்சொண்டால்
மென்று பழத்தை உண்கின்றாய்

சிவப்பு வளையல் கழுத்தினிலே
சிறப்பாய் நீயும் கொண்டுள்ளாய்
உவந்து கோவைக் கனியுண்ணும்
உந்தன் அழகோ உயரியது

மனிதா் உன்னை வளர்ப்பதனால்
மகிமை பெற்ற கிளியாரே!
இனிமை யாகப் பேசிநீ
இதயம் தன்னைக் கவர்கின்றாய்

மனிதர் போல பேசுவதால்
மகிழ்வை எமக்குக் கொடுக்கின்றாய்
இனிய குரலில் கீச்சிட்டே
இன்பம் நாளும் தருகின்றாய்

பாலர் எங்கள் உள்ளத்தின்
பிரியம் பெற்ற கிளியாரே
காலம் எல்லாம் உன்வடிவில்
களிப்பே நாமும் அடைவோமே!

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறிய குழந்தைகளே!

சின்னஞ் சிறிய குழந்தைகளே!
சிந்தை கொஞ்சம் செய்யுங்கள்
அன்னை உங்களை ஈன்றெடுக்க
அடைந்த அல்லலை நோக்குங்கள்

உங்களுக் கான உணஉடைகள்
உரிய பொருட்கள் வாங்குதற்காய்
உங்கள் தந்தை உழைக்கின்ற
உயரிய கஷ்டம் நோக்குங்கள்

படிப்பில் நீங்கள் உயர்வதற்காய்
பாடம் புகட்டும் ஆசிரியர்
இடர்கள் எத்தனை அடைகின்றார்
இதனை எண்ணிப் பாருங்கள்

நன்றே என்று நல்நிலைக்கு
நாளை நீங்கள் உயர்வதற்காய்
இன்றே நன்கு கல்வியிலே!
இனிதே நாட்டம் செலுத்துங்கள்

நல்ல ஒழுக்க நெறிநடந்து
நல்ல பிள்ளை எனும்பெயரும்
கல்வியில் சிறந்தோன் எனும் பெயரும்
கண்டிட நீங்கள் முயலுங்கள்

❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைப் பார்

வீதியில் விரைந்து செல்கின்ற
வியப்பு மிக்க காரைப்பார்
பாதையில் செல்லும் எல்லோரும்
பார்க்கும் அந்தக் காரைப்பார்

படித்து முடித்துத் தொழிலாலே
பணத்தை அதிகம் உழைத்திடுவோர்
நெடிய தூரப் பயணத்தை
நன்றாம் காறில் செல்கின்றார்

நானும் நாளை படித்தபின்னே!
நல்ல தொழிலில் சேர்ந்திடுவேன்
ஆன பெரிய வேதனத்தை
அடைவேன் மாதப் படியாக

மீதப் பணத்தில் கார்வாங்கி
மகிழ்வாய் நானும் பயணிப்பேன்
ஆதலி னாலே நான்இன்று
ஆசை கொண்டே! படித்திடுவேன்

அன்னை தந்தை சோதரரை
அந்தக் காரில் நான் ஏற்றி
நன்கே பயணம் செய்திடுவேன்
நன்றே அதற்காய்ப் படித்திடுவேன்

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றே !

காற்றே நீயும் புயலாகக்
காட்சி ஏதும் தராதே!
போற்றி உன்னைத் தென்றலெனப்
புரிந்தே! நாமும் வைத்துள்ளோம்

புயலே! என்று நிமாறிப்
பேயின் ஆட்டம் போடாதே!
பயமே! கொள்ளும் அளவுக்குப்
பாதையில் மரங்களை வீழ்த்தாதே!

வீட்டின் கூரைத் தகடுகளை
வீதியில் எடுத்து வீசாதே!
ஆட்டின் குடிலை எங்கேயோ!
அடித்து நீயும் செல்லாதே!

தெங்கு வேம்பு மரங்களையும்
தொகையாய்ச் சரித்து வீழ்த்தாதே!
இங்கே! உந்தன் கொடுமைகளை
இம்மி அளவும் செய்யாதே!

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுனாமி

கடலே! நீயும் கரைதாண்டி
கனத்த தூர ஊரதனை
அடைய நீயும் விளையாதே!
அனர்த்தச் சுனாமி ஆகாதே!

கடலே! உந்தன் கரையினிலே!
காற்றை நுகர்ந்து களிப்பதனை
அடைந்தே! வாழும் எங்களுக்கு
அல்லல் நீயும் நல்காதே!

ஆழிப் பேரலை என்றாகி
அழித்து எம்மைச் செல்லாதே!
வாழும் எங்கள் வாழ்வதனை
வசந்தம் இல்லா தாக்காதே!

எங்கள் வீடு வளவுகளை
என்றும் எடுத்துச் செல்லாதே!
பொங்கி எழுந்திடும் உன்னலையை
பொறுமை கொண்டு அடக்கிவிடு

கடலே! நீயும் பேரலையாய்க்
கரையைத் தாண்டி வாராமல்
நடந்திடு என்றும் நலமாக
நம்பி நாமும் உனையுள்ளோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ச் சோலை

எந்தன் வீட்டின் மலர்ச்சோலை
எழிலே! நிறைந்து உள்ளதுவே!
அந்தத் தோப்பின் அழகைத்தான்
அதிகம் பார்த்து நான் மகிழ்வேன்

மல்லிகை ரோசா மற்றும் பல
மலரின் செடிகள் இதிலுண்டு
பல்நிறப் பூக்கள் பூத்ததுவும்
பார்க்க அழகாய் இருந்திடுமே!

தாய்தான் தினமும் பூச்செடிக்குத்
தண்ணீர் இறைத்து மகிழ்வாளே
காய்தல் இன்றிச் செழுமையுடன்
காட்சி நல்கும் பூச்செடிகள்

வண்டுகள் தேனி என்றுபல
வகையாம் பூச்சிகள் மலர்களிலே!
நன்கே அமர்ந்து தேனுண்ணும்
நாளும் பார்த்து ரசிப்பேனே!
குளத்தின் அழகைப் பாருங்கள்

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளத்தின் அழகு

குதுகல மாக இருக்கிறது
வளமாய்த் தாமரை படர்ந்தேதான்
வடிவாய்ப் பூத்துத் திகழ்கிறது

மீன்களும் குளத்தில் நிறைந்துளது
முதலையும் மிதந்து திரிகிறது
கான்பற வைகளும் கரையினிலே!
களிப்பாய் நீரும் அருந்துகிறது

எருமைகள் அதிகம் குளத்தினிலே!
எழிலாய்க் குளித்து மகிழ்கிறது
அருமை யான காட்சியெலாம்
அமைந்த இடமாய்க் குளமுளது

கொக்கும் கரையில் மீன்களினை
கொத்தக் குறியாய் நிற்கிறது
பக்கத் திருக்கும் மரமெல்லாம்
பறவைகள் நிறைந்து காண்கிறது

நீரில் நீந்தும் பறவைகளும்
நிறையக் குளத்தில் நீந்துறது
பாரில் இந்தக் காட்சிதனைப்
பார்க்கப் பரவசம் ஆகிறது

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயலின் அழகைப்பார்

நெல்லின் மணிகள் விளைகின்ற
நீண்ட வெளியின் வயலைப்பார்
சொல்ல முடியாச் செல்வத்தின்
சிறந்த நெல்லின் பயிரைப்பார்

பச்சைப் பசேல் என்றேதான்
பார்க்கும் தூரப் பரப்பெல்லாம்
இச்சை கொள்ள வைக்கின்ற
இந்த வயலின் அழகைப்பார்

வியர்வை சிந்தி வயலினிலே!
வேலை செய்யும் விவசாயி
உயர்வைக் காணும் வேட்கையுடன்
உழைப்பில் திழைக்கும் விதத்தைப்பார்

நெல்லின் கதிர்கள் முற்றியதால்
நிலத்தில் சாய்ந்துள நிலையைப்பார்
நெல்லைத் தின்னக் கிளிக்கூட்டம்
நிலத்தில் படையாய் இறங்கல்பார்

பன்றி, யானை மாடுகளின்
பாதகம் தன்னை போக்குதற்காய்
நன்றே வயலின் காரரவர்
நிறுவித் தங்கும் கொட்டில் பார்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளர்

உயரிய மலையின் உச்சினிலே!
உடலை உறுத்தும் பனியினிலே!
உயிரைக் காக்க உணவிற்காய்
உழைக்கும் தோட்டத் தொழிலாளர்

தேயிலைக் கொழுந்தைக் கொய்தேதான்
தேகத் துணைவைத் தேடுகிறார்
ஆயுளை அந்தத் தொழிலுக்காய்
ஆக்கி வறுமையில் வாடுகிறார்

கூடையை முதுகில் ஏந்துவதால்
கூணல் என்றே முதுகாகி
ஆடையும் வாங்க வக்கற்ற
அவல வாழ்வில் திழைக்கின்றார்

நாட்டின் உயர்வுக் குழைக்கின்ற
நல்ல தோட்டத் தொழிலாளர்
வீட்டின் நிலையோ வெறுமைதான்
வீணாம் அவர்கள் வாழ்வெல்லாம்

நாட்டில் நல்ல வறுமைக்கு
நன்றே இலக்கண மென்றான
தோட்டத் தொழிலார் வாழ்வினிலே!
தொலைந்து வறுமை போகாதோ!

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனோர்கள்

ஆழக் கடலின் அலைதனிலே!
ஆருயிர் உணவைத் தேடுதற்காய்
ஏழை அந்த மீனோர்கள்
எத்தனை இன்னல் அடைகின்றார்

சீறிப் பாயும் அலைகளிலே!
சிறிய தோணி ஓட்டித்தான்
பாரில் தங்கள் வாழ்வதனைப்
பாதக நிலையில் கடத்துகிறார்

கடலின் கரையில் சிறுகுடிளில்
காலம் பூராய் வாழ்கின்றார்
கடலின் தொழிலார் இவர்களது
கதையோ ஏழ்மை நிறைந்ததுதான்

வறுமை வாழ்வின் வடிவென்றே!
வாழும் மீனோர் நாட்டினிலே!
பெரிதாம் உயர்வு காண்பதற்கு
புரிந்தே அரசும் உதவிடுமோ!

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகம்

பறவை தனிலே காகமது
பெரிதும் புத்தி மிக்கதுவே!
கறுப்பு நிறத்தின் அடையாளம்
காகம் என்றே! கதைப்பார்கள்

சிறிதே உணவைக் கண்டிடினும்
சிறப்பாய்க் கரைந்து தன்னினத்தைப்
பெருமை யுடனே! அழைத்துண்டு
பெரிதும் ஒற்றுமை பேணிடுமே!

தென்னை மரத்தில் கூண்டமைத்து
தரமாய் அடையும் காத்ததுவும்
நன்கே குஞ்சும் பொரித்திடுமே!
நாளும் உணவும் புகட்டிடுமே!

காலைப் பொழுதின் வேளையிலே!
காகா என்று கரைந்தேதான்
பாலகர் நாமும் கலைக்கூடம்
போக எம்மை எழுப்பிடுமே!

வீதி வீட்டு அசுத்தமெலாம்
விரும்பிக் காகம் உண்பதனால்
பாதக அசுத்தம் நீங்கிறதே!
புவிக்கு நன்மை ஆகிறதே!

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எலியின் தொல்லை

எலியின் தொல்லை வீட்டினிலே!
எத்தனை வகையாம் என்றேபார்
நலமாம் வீட்டின் உணவுகளை
நாளும் நாசம் செய்கிறதே!

அடுக்களைப் பொருட்கள் அனைத்தினையும்
அதிகம் உண்டு அழிக்கிறதே!
உடுத்தும் உடுப்பை கொறித்ததுவும்
உதவா நிலைக்கு ஆக்கிறதே!

நோயும் எம்மைத் தொற்றுதற்கு
நன்கே வழியும் வகுக்கிறதே!
காயம் நல்கும் வகையினிலே!
கடித்தும் எம்மை வருத்திறதே!

எலியின் தொல்லை நீங்குதற்கு
ஏற்றம் என்றே பூனையினை
நலமே வீட்டில் வளர்ப்போமே!
நல்ல பலனை பெறுவோமே!

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனிதம் என்றும் காத்திடுவோம்

படிப்பில் எங்கள் நேரத்தைப்
பெரிதாய் நாளும் கடத்திடுவோம்
கொடுமை யார்க்கும் செய்யாமல்
கண்ணிய மாக நடந்திடுவோம்

உயிர்கள் இடத்தில் இரக்கத்தை
உயர்வாய் என்றும் காட்டிடுவோம்
உயரிய நல்ல சிந்தனையின்
ஊற்றாய் உளத்தைக் காத்திடுவோம்

உண்மை நேர்மை நீதிநெறி
உலகில் என்றும் வாழ்ந்திடுவோம்
என்றும் எங்கள் பெற்றோரின்
ஏவல் யாவும் செய்திடுவோம்

மற்றோர் தமக்கு நன்மையினை
மகிழ்வாய் நாமும் செய்திடுவோம்
உற்றார் உறவார் அனைவரையும்
உவந்தே! என்றும் மதித்திடுவோம்

நல்லோன் என்றே நாட்டினிலே
நாமும் நற்பெயர் பெற்றிடுவோம்
பொல்லார் உறவைத் தவிர்த்தேதான்
புனிதம் என்றும் காத்திடுவோம்

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சைக் கிளியாரே !

காலை மாலைப் பொழுதெல்லாம்
கானக மெங்கும் உணவுக்காய்
ஆலை போன்று ஓய்வின்றி
அலையும் பச்சைக் கிளியாரே!

வந்து எந்தன் வீட்டினிலே
வாழ நீயும் விரும்பிவிடு
எந்த நேரம் ஆனாலும்
ஏற்ற உணவு நான்தருவேன்

தங்கும் தளமாய் உந்தனுக்குத்
தரமாம் கூண்டும் தந்திடுவேன்
எங்கும் நீயும் அலையாமல்
எளிலாய் என்னிடம் வந்துவிடு

எந்தன் மீது பாசத்தை
எழிலாய் கொண்ட பாலகனே!
எந்தன் எளிலாம் வாழ்க்கையது
ஏதும் உனக்குப் புரியாதே!

கானகம் எங்கும் சுதந்திரமாய்க்
களிப்பாய் நானும் திரிகின்றேன்
ஆன சிறிய கூண்டுக்குள்
அடங்கி வாழ வருவேனோ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பிய கனிவகை உண்டேதான்
விடுதலை உடனே வாழ்கின்றேன்
தருகிற உணவை எதிர்பார்த்துத்
தடுப்புக் கூண்டுள் வாழ்வேனோ!

விடுதலை இன்பம் என்பவற்றின்
விதப்புரை என்றே நானுள்ளேன்
அடிமை வாழ்வு வாழ்வதற்கு
அழைத்திட வேண்டாம் பாலகனே!

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயாரே !

உணவைத் தேடி தெருவெங்கும்
உலவும் நல்ல நாயாரே!
கனத்த உணவு நான்தருவேன்
கட்டி உன்னை வளர்த்திடுவேன்

இனிமேல் எங்கும் திரியாமல்
இன்றே! என்னிடம் வந்துவிடு
உனக்கோ! இறைச்சி உணவெல்லாம்
உவப்பாய் நானும் தந்திடுவேன்

எந்தன் வாழ்வைப் புரியாமல்
ஏதோ சிறுவா! கதைக்கின்றாய்
இந்த எந்தன் வாழ்வதுவோ
இன்பம் மிகைத்த வாழ்வாகும்

அடிமைத் தளையின் அடையாளம்
ஆகிட என்னைச் சங்கிலியின்
பிடியில் பிணைத்து வைத்தேநீ!
பேணிட ஏனோ! அழைக்கின்றாய்

கட்டி வைத்து எந்தனுக்குக்
கனத்த மாமிசம் தந்தாலும்
இட்டம் போல நான்வாழும்
இன்ப வாழ்வாய் அமையாதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமை போன்று எனைக்கட்டி
அதிக உணவு தந்தாலும்
விடுதலை இல்லா இவ்வாழ்வை
விரும்பி யானும் ஏற்பேனோ?

உணவே எனக்குக் கிட்டாமல்
உயிரே பிரிந்து போனாலும்
கணமும் சிறுவா உன்வாழ்வில்
கரிசனை காட்டேன் அறிவாயோ!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகம் அழிவைத் தாராதே!

அதிக மழையும் பெய்கையிலே!!
அதுவோ வெள்ளம் ஆகிடுமே
கதியே இல்லா நிலைமைக்கு
கனத்த ஊர்களை ஆக்கிடமே!

பயிரும் வயலும் வெள்ளத்தால்
பாழாய் ஆங்கே போய்விடுமே!
உயிரினம் கோழி ஆடுகளும்
உயிரை இழந்து மாய்ந்திடுமே!

வீட்டின் உள்ளும் நீர்புகுந்து
வீணாம் நாசம் செய்திடுமே!
காட்டின் விலங்கும் கதியற்று
கனமாய் உயிரை இழந்திடுமே!

உண்ண உணவும் இல்லாமல்
உயிர்கள் யாவும் பதைத்திடுமே!
மண்ணில் வெள்ளம் மாந்தர்க்கு
மாபெரும் கேட்டைத் தந்திடுமே!

மழையே நீயும் மண்மீதில்
மிகையாய் பெய்து பிரளயமாய்
அழையா விருந்தாய் வாராதே!
அதிகம் அழிவைத் தாராதே!

❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரம் காத்திடுவாய்

பேய்கள் என்று யாரேனும்
பயமே உனக்குக் காட்டிடினும்
ஆய்ந்து நீயும் அறிந்திடுவாய்
அப்படிப் பேய்கள் ஏதுமில்லை

என்றும் எதற்கும் அஞ்சாமல்
ஏற்ற வீரம் காத்திடுவாய்
நன்றே! அல்ல பயம்கொள்ளல்
நாசம் அதுவே நமக்கென்றும்

களவு பொய்கள் தீச்செயல்கள்
கண்டால் அதற்கோ பயந்துவிடு
உளத்தால் அதனை வெறுத்துவிடு
உண்மை நெறியில் நடந்துவிடு

வீணாம் அச்சம் தவிர்த்தேநீ
வீரன் என்றே வாழ்ந்திடுவாய்
கானக வழியில் நடக்கையிலும்
கனத்த துணிவு கொண்டிடுவாய்

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியில் வெற்றி கண்டிடுவாய்

காகம் கரையும் அதிகாலை
கண்ணை நீயும் விழித்திடுவாய்
தாகம் கொண்டே கல்வியிலே!
தினமும் பள்ளி சென்றிடுவாய்

பாடம் ஆசான் புகட்டுகையில்
பெரிதும் கவனம் செலுத்திடுவாய்
கூடிய அறிவை நீபெற்றே
குதூகலம் புவியில் அடைந்திடுவாய்

மாலைப் பொழுதின் வேளையிலே!
மகிழ்ந்து நீவிளை யாடிடுவாய்
காலைப் பொழுதில் படிப்பென்றே!
காலம் தன்னைக் கடத்திடுவாய்

தாயும் சொல்லும் வேலைகளைத்
தட்டா தென்றும் செய்திடுவாய்
தூய நல்ல தன்மையிலே!
துலங்கி நீயும் உயர்ந்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி விதிப்படி நடப்போம்

வீதியில் நாமும் செல்லுகையில்
வீதி விதிப்படி நடப்போமே!
பாதகம் தவிர்க்கும் நோக்கினிலே
பக்குவம் இதனில் காப்போமே!

வாகனம் விரைந்தே வருவதனால்
விபத்தும் அதிகம் நிகழ்கிறதே
வேகம் தனித்து நாங்களுமே
விவே கமாய் நடப்போமே

எத்தனை விபத்து வீதியிலே
எல்லாம் எதனால் நேர்கிறதோ!
அத்தனை விபத்தும் இங்கேனோ
அவசரம் தன்னால் ஆகிறதே!

உயிரே மாயும் அளவுக்கு
உருவே கொண்ட விபத்ததனை
உயரிய எங்கள் கவனத்தால்
உணர்ந்தே நாமும் தவிர்ப்போமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோசாப் பூ

மலர்களில் அழகு ரோசாப்பூ
மனத்திலும் அதுவே உயரியது
நிலத்தில் அதனை நாம் வளர்த்து
நித்தம் மகிழ்வு காண்போமே!

முள்ளின் செடியில் இத்தகைய
மேன்மை மலரும் மலர்கிறதே!
உள்ளமும் ரோசா மலர்தனிலே!
உவகை அதிகம் அடைகிறதே!

சிவப்பு மஞ்சள் வெள்ளையென
சிறப்பாம் நிறத்தில் ரோசாப்பூ
கவர்ச்சி யாகத் திகழ்கிறதே!
காண்போர் உளத்தைக் கவர்கிறதே!

மாதர் தலையில் சூடுகிற
மேன்மை மலரும் இதுதானே!
ஆத லாலே இம்மலர்க்கு
அதிகம் சிறப்பு புவியினிலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டம் விட்டு மகிழ்ந்திடுவோம்

பட்டம் விட்டு மகிழ்ந்திடுவோம்
பாடிப் பாடி விட்டிடுவோம்
வெட்ட வெளியில் நின்றே நாம்
விண்ணில் பறக்க விட்டிடுவோம்

வீசும் காற்றின் வேகத்தில்
வானில் உயர விட்டிடுவோம்
மோசம் அதுவும் புரியாமல்
மேகத் தூரம் பறந்திடுமே

வியக்கும் வண்ணம் விண்மீதில்
விமா னம்போல் பறந்திடுமே!
துயரம் கூட சிலவேளை
தொடராய் எம்மை வாட்டிடுமே

உயரிய தூரம் பறக்கையிலே
உரிய நூலும் அறுந்திடிலோ
பெயர்ந்து எங்கோ மறைந்திடுமே
பெரிதாம் கவலை தந்திடுமே

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகே! அற்புதமே!

அழகே அழகே அற்புதமே!
அகில அழகின் தத்துவமே!
தமிழின் கவிஞர் கருப்பொருளே!
தழைத்த அழகின் முழுமதியே!

விண்ணில் தவளும் வளர்மதியே!
வியப்புறு வகையின் பேரொளியே!
மண்ணில் இருளின் அழிவிடமே!
மனதைக் கவரும் நல்லிடமே!

கடலின் கரைக்கு அழகானாய்
கனத்த சிறுவர் உறவானாய்
சுடரை நல்கும் விளக்கானாய்
தூய வடிவின் பொருளானாய்

வளரும் பிறையாய் வளர்மதியாய்
வடிவின் உவமை ஆனதுவாய்
விளங்கும் மதியின் மகிமையினை
விளம்ப யாரால் முடிந்திடுமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமைப் பட்டோர் வீட்டினிலே!
வழங்கும் சுடரின் திரியானாய்
பெருமை விண்ணுக் களிக்கின்ற
பொருளும் நீயே! ஆகிட்டாய்

மதியின் அழகில் மூழ்காத
மண்ணில் மனிதர் யாருண்டோ
பதியில் அழகைப் பகர்வதற்குப்
பகரம் வேறு பொருளுண்டோ!

❖


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலாசிரியரின் நூல்கள்

1. அமைதிப்பூக்கள்(கவிதை)
2. மூதூர் உமர்நெய்னார் புலவர் கவிதைகள் (தொகுப்பு)
3. மூதூர் உமர்நெய்னார் புலவர் (சீராப்புராண உரை (பதறுப்படலம்) (மறுபதிப்பு)
4. மனிதம் (குறள், வெண்பா, நூல்)
5. நாயகக் காவியம்
6. ஊர் துறந்த காவியம்
7. கவிஞர் மூதூர் எஸ்எல்.எம். முகைதீன் கவிதைகள் (தொகுப்பு)
8. அன்பின் மகனுக்கு (கடிதங்கள் தொகுப்பு)
9. அஷ்ர.்.ப் அமரகாவியம்
10. இஸ்லாமியக் குறள்
11. வசந்தம் (கவிதை)
12. எந்தன் ஊரே (கவிதை)
13. வாப்பு மரைக்கார் வழிக்காவியம்
14. படகு மூழ்கிய காவியம்
15. மூதூர் சுனாமிக் காவியம்
16. யதார்த்தம் (கவிதை)
17. கடலும் கண்ணீரும் (சிறுகதை)
18. மழலைக் கீதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாங்கான சிந்தனைகள் பாலர் மனங்களிலே
ஓங்கிட வேண்டுமென்ற உன்னதத்தைத் – தாங்கியே
எந்தனது பாடல்கள் ஏற்றமாய் இந்நூலில்
வந்தே உளதை விளங்கு

பாலர் மனங்களிலே பண்பான எண்ணங்கள்
கோலமாய் ஓங்கிடவும் காத்திரமாய்க் – காலமெலாம்
நீடித்து நிலைபெறவும் நல்லதாம் பாடல்களை
நாடி எழுதினேன் நான்.

மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்

ISBN 978-955-41569-5-1

Printed by : A.R.T. Trinco 0777895656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org